பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 26 செவ்வாய்க்கிழமை 12.01.2021 கதிர் 299

# வவுனியா நகர மையம் உடனடியாக முடக்கம்

## தொற்று அதிகரிப்பை அடுத்து



(ந.லோகதயாளன், கி.வசந்தரூபன்)
யாழ்ப்பாணம், ஜனவரி 12

வவுனியாவில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்றையடுத்து இன்று முதல் மறு அறிவித்தல் வரையில் நகரின் மையப்பகுதி முழுமையாக தற்காலிகமாக தனிமைப்படுத்தலிற்கு உட்பட்டுள்ளது. அப்பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2

## அனைத்து நீர்ப்பாசனக் குளங்களும் கிளிநொச்சியில் வான் பாய்கின்றன!



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்ப்பாசனக் குளங்களும் வான் பாய்கின்றன. அந்தவகையில் இரணைமடுகுளம், கல்மடுகுளம்,

2

## மேலும் நால்வருக்கு வவுனியாவில் தொற்று

வவுனியாவில் மேலும் நான்கு பேருக்கு இன்று மதியம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, பட்டாணிச்சூர் மற்றும் நகர வர்த்தக நிலையப் பகுதிகளில் கடந்த ஒரு வாரத்தில் 124 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து நகரின் பல்வேறு பகுதிகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

2

## புலிகளை நினைவுகூரும் தூபிகள் எங்கிருந்தாலும் இடிக்க வேண்டும்

### காட்டத்துடன் விமல் வீரவன்ஸ கருத்து



யாழ். பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட தூபியை மாத்திரமல்லாது விடுதலைப் புலிகளை நினைவுகூரும் தூபிகள் வடக்கில் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அவற்றை முழுமையாக இடித்தழிக்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிகளை நினைவுத் தூபிகள் அமைத்தோ அல்லது பகிரங்க நிகழ்வுகள்

2



## கிளிநொச்சியில் வெள்ளத்தினால் 745 பேர் பாதிப்பு

தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இன்றுவரை(12) 235 குடும்பங்களைச் சேர்ந்த 745 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. அத்தோடு பல கிராமங்களில் சில பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன எனவும், போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த வகையில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 49 குடும்பங்களைச் சேர்ந்த 152 பேரும், கண்டாவளையில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேரும்,

2

## சுகாதார உத்தியோகத்தர்கள் 21 பேருக்கு மட்டு.போதனா வைத்தியசாலையில் தொற்று

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய 21 சுகாதார துறையினருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் திருமதி க.கலாரஞ்சனி தெரிவித்துள்ளார்.

இன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வருபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டும்.

2

## சுமந்திரனின் வீட்டில் ஒட்டப்பட்ட தனிமைப்படுத்தல் அறிவிப்பு நீக்கம்

### ஒட்டிய பொலிஸாரே வந்து அகற்றினர்

சுமந்திரன் எம்.பி. சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் எனத் தெரிவித்து அவரது யாழ் நகர வீட்டு முன்புறத்தில் பொலிஸார் நேற்று ஒட்டிய 'ஸ்ரிக்கர்' இன்று மாலை பொலிஸாராலேயே அகற்றப்பட்டது.

ஹக்கீம் எம்.பிக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டமையை அடுத்து அவருடன் பழகிய எம்.பிக்களை பி.சி.ஆர். சோதனை செய்யும்படி கோரப்பட்டது. அதன்படி சுமந்திரன் எம்.பியும் சோதனை செய்தார். அவருக்குத் தொற்று இல்லை என அறிவிக்கப்பட்டது.

எனினும் யாழ்ப்பாணம் பொலிஸார் அவரது வீட்டில் 'தனிமைப்படுத்தல்' ஸ்ரிக்கரை ஒட்டினர்.

அதனால் சுமந்திரன் எம்.பி. தன்னை வீட்டுக்குள்

2

## ரஞ்சன் ராமநாயக்காவுக்கு 4 ஆண்டுகள் கடூழியச் சிறை

### நீதிமன்றை அவமதிப்பு வழக்கில்



நீதிமன்றை அவமதித்தமைக்காக முன்னாள் பிரதி அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்காவுக்கு நான்கு ஆண்டுகள்

2

## உண்மையைப் பேசிவிட்டே உள்ளே செல்கின்றேன்....!

### சிறைக்குப் புறப்பட்ட போது ரஞ்சன் விசனத்துடன் கூற்று

கொள்ளையடிக்கவில்லை, குடுவிற்பனை செய்யவில்லை. உண்மையைப் பேசிவிட்டே உள்ளே செல்கின்றேன். அனைவருக்கும் கடவுள் துணை...

- இவ்வாறு நாடாளுமன்ற

2

### வாழைச்சேனையில் இன்று சுற்றிவளைப்பில்

## கள்ள மண் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர் 13 வாகனங்களுடன் மடக்கப்பட்டனர்



மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புனாணை மைலந்தனை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட பதின்மூன்று சந்தேக நபர்கள் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர். பதின்மூன்று வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புனாணை மைலந்தனைப் பிரதேசத்தில் சட்டவிரோதமான

2

## கன்னியா விபத்தில் இளைஞர் மரணம்

திருகோணமலை - ஹொரவ்பொத்தானை பிரதான வீதியில் காணப்படும் கன்னியா கற்குவாரி வளைவில் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் புல்மோட்டை அரபாத் நகர் பகுதியைச் சேர்ந்த என்சிலூன் முஜிபுர் ரஹ்மான் (29வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை

2

## கள்ள மண் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர் ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர் என வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து அந்த இடத்தில் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர்.

இதன்போது மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பதின்மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். பத்து உழவு இயந்திரங்கள் மற்றும் மூன்று கனரக வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. நீண்ட காலத்துக்குப் பிறகு அதிக வாகனங்களுடன் அதிக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் சட்டவிரோத மரம் கடத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன எனவும், அதனை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன மேலும் தெரிவித்தார்.

## வவுனியா நகர மையம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய வவுனியா நகரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரையான பிரதேசம், வவுனியா நகரிலிருந்து தாண்டிக்குளம் சந்தி வரையான பகுதி, வவுனியா நகரிலிருந்து கண்டி வீதியில் வன்னி இராணுவ முகாம் வரையிலான பகுதி, வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் சந்திக்கு உட்பட்ட பிரதேசம் ஆகியவற்றுடன் வவுனியா நகரிலிருந்து மாமடுவ சந்தி வரையிலுமான பகுதி ஆகியன முடக்கப்படுவதுடன் மக்கள் வெளிச்செல்ல அனுமதியும் மறுக்கப்பட்டு மக்கள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் பாதுகாப்பு பிரிவினர் மூலம் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அத்தியாவசிய தேவையின்றி நகருக்குள் செல்வற்கு அனுமதி மறுக்கப்படுவதுடன் அரச உத்தியோகத்தர்கள் அடையாள அட்டையைப் பாதுகாப்பு பிரிவினருக்கு அடையாளப்படுத்தி கடமைகளுக்கு செல்ல முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தனிமைப்படுத்தலிற்கு உட்படும் பிரதேசத்திற்குள்ளேயே மாவட்டத்தின் முக்கிய வைத்தியசாலை, மாவட்டச் செயலகம், சுகாதார அதிகாரி பணிமனை என்பன தொடர்ந்து இயங்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனிமைப்படுத்தப்படும் பகுதிகளூடாக நகருக்குள் பிரவேசிக்கும் தனியார், இ.போ.ச பஸ்கள் நகரின் எப்பகுதியிலும் தரித்து நிற்பதற்கு தடை விதிக்கப்படும். வைத்தியசாலைக்கு அருகேயுள்ள பஸ் தரிப்பிடத்தில் மாத்திரம் பஸ்களை நிறுத்த முடியும் எனவும், முடக்கப்படும் பகுதிகளில் விவசாயிகளின் நலனைக்கருத்தில்கொண்டுவழி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறையினையும் அமுல்படுத்தப்படுவது என்பன போன்றபலதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதேநேரம் வவுனியா நகரக் கோட்ட பாடசாலைகள் மூடப்படுகின்றன.

அதேசமயம் அப்பகுதியில் தற்போது மேலும் 2 ஆயிரம் பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த 2 ஆயிரம் மாதிரிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் தற்காலிக முடக்கத்தை நீக்குவதா அல்லது நீடிப்பதா என்பதனை தீர்மானிப்பது எனவும் இன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் அதிகரித்து வருகின்ற கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் முகமாக விசேட கலந்துரையாடல் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் இன்று வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவ் விசேட கலந்துரையாடலில் பொலிஸ் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், சமயத்தலைவர்கள், கல்வி திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மேலும் நால்வருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் கடந்த சனிக்கிழமை மில் வீதியில் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும் என நான்கு பேருக்கு இன்று மதியம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த ஒரு வாரத்தில் 128 பேர் வவுனியாவில் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

## அனைத்து நீர்ப்பாசனக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கராயன்குளம், புதுமுறிப்பு குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகபடுவான்குளம், கனகாம்பிகைகுளம்,பிரமந்தனாறுகுளம், குடமுருட்டிகுளம் ஆகிய பெரிய நீர்ப் பாசனக்குளங்கள் அனைத்தும் வான் பாய்கின்றன.

இரணைமடு குளத்திற்கான நீர் வருகை தொடர்ந்தும் காணப்படுவதனால் குளத்தின் வான் கதவுகள் பதினான்கும் தொடர்ந்தும் திறந்து விடப்பட்டுள்ளன என நீர்பாசன திணைக்களம் தெரிவிக்கின்றது.

இரண்டு வான் கதவுகள் 2 அடியாகவும், 4 வான் கதவுகள் 1 அடி 6 அங்குலமாகவும், 4 வான் கதவுகள் 1 அடியாகவும், 4 வான் கதவுகள் 6 அங்குலமாகவும் திறந்து விடப்பட்டுள்ளன என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவிக்கின்றது. தொடர்ச்சியான நீர் வருகை காணப்படுவதனால் திறக்கப்பட்ட வான் கதவுகளின் அளவுகள் அதிகரிக்கப்படலாம் எனவும், கனகராயன் ஆற்று படுக்கையின் கீழ் உள்ள மக்கள் குறிப்பாக பன்னங்கண்டி, கண்டாவளை, முரசுமோட்டை, பரந்தன், ஊரியான், உமையாள்புரம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது,

இதேவேளை கிளிநொச்சி நீர் பாசன குளங்களான கல்மடு குளம் 10 அங்குலமும், பிரமந்தனாறு குளம் 8 அங்குலமும், கனகாம்பிகை குளம் 5 அங்குலமும் வான் பாய்ந்து வருகின்றன.

மேலும் அக்கராயன் குளம் 7 அங்குலமும், கரியாலை நாகபடுவான்குளம் 10 அங்குலமும், புதுமுறிப்பு குளம் 8 அங்குலமும், குடமுருட்டி குளம் 7 அங்குலமும், வன்னேரிக்குளம் 4 அங்குலமும் வான் பாய்ந்து வருகின்றன என நீர்பாசன திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நீர்நிலைகளை அண்மித்த மற்றும் நீர் வடிந்தோடும் பகுதிகளில் உள்ள மக்களிற்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் தமது வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதுடன், பாதுகாப்பான முறையில் நடந்து கொள்ளுமாறும் நீர்பாசன திணைக்களம் தொடர்ந்தும் அறிவுறுத்தி வருகின்றது.

இதேவேளை, கனகாம்பிகைகுளம், இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு, புளியம்பொக்கணை, பெரியகுளம், உழவனூர், பிரமந்தனாறு உள்ளிட்ட தாழ்வு நில பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தி உள்ளது.

தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி பதிவாகும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும், குளங்கள் மற்றம் நீர் தேங்கியுள்ள ஆழமான பகுதிகளை பார்வையிடச் செல்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சிறுவர்கள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் தொடர்பில் பொதுமக்கள் அவதானம் செலுத்த வேண்டும் எனவும், இடர்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாக கிராம சேவையாளர் ஊடாக அல்லது பொலிஸார், இராணுவத்தினரின் உதவியை பெற்றுக் கொள்ளுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

## புலிகளை நினைவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியோ நினைவுகூரல் நடத்துவது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெரும் குற்றமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவிக்கையில், ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த தூபியைத் துணைவேந்தர் இடித்து அகற்றியுள்ளார். இது அவரின் தற்துணிவை எடுத்துக்காட்டுகின்றது.

இறுதிப்போரில் மரணித்த பொதுமக்களை நினைவேந்தும் தூபி என்ற பெயரில் அங்கு அமைக்கப்பட்டிருந்தது புலிகளை நினைவேந்தும் தூபியே. இதைப் பல்கலைக்கழத்தில் வைத்திருப்பது சட்டவிரோதமானது. அதற்கமைய நல்லதொரு தீர்மானம் எடுத்து அந்தத் தூபியைத் துணைவேந்தர் இடித்துள்ளார்.

மூவின மாணவர்களின் நன்மை கருதி இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்திருப்பாரென நான் நினைக்கின்றேன். எனவே, மாணவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் கல்வியைத் தொடர வேண்டும் என விமல் குறிப்பிட்டுள்ளார்.

## சுகாதார உத்தியோக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர் ஒருவருக்கு பார்வையாளர் ஒருவரே அனுமதிக்கப்படுவார். அதுவும் 15 நிமிடம் மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வயோதிபர்கள், இருதய, சிறுநீரக நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்து வீட்டில் இருந்தே தொலைபேசியில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

## ரஞ்சன் ராமநாயக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடூழியச் சிறைத்தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

நீதியரசர்கள் சிசிர டி அப்ரூ, விஜித் மலல்கொட, ப்ரீத்தி பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை ஏகமனதாக வழங்கியது.

தீர்ப்பை அறிவித்த மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வின் தலைமை நீதியரசர் சிசிர டி அப்ரூ, ரஞ்சன் ராமநாயக்காக்கு எதிராக சட்ட மா அதிபர் சுமத்திய நீதிமன்ற குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

அதன்படி, ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்ற அவமதிப்பு குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, அவருக்கு கடூழியத்துடன் கூடிய நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படுவதாக நீதியரசர் தீர்ப்பளித்தார்.

2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் 21ஆம் திகதியன்று அலரிமாளிகையில் நடந்த கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களிடம் பேசிய அப்போதைய பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, “இந்த நாட்டில் பெரும்பான்மையான நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் ஊழல் மிக்கவர்கள் என்று கூறியிருந்தார்.

இந்தக் கருத்தின் ஊடாக நீதிமன்றத்தை ரஞ்சன் ராமநாயக்க அவமதித்தார் எனக் கூறி, மாகல்கந்தே சுதத்த தேரர் மற்றும் ஒய்வு பெற்ற விமானப் படை அதிகாரியான சுனில் பெரேரா ஆகியோரால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ரஞ்சன் ராமநாயக்க நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தி நீதித்துறையை அவமதித்துள்ளார் என்று சட்ட மா அதிபரால் குற்றஞ்சாட்டப்பட்டது.

## உண்மையைப் பேசி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

நீதிமன்ற வளாகத்திலிருந்து, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிறைச்சாலை பஸ்ஸில் ஏற்றப்படும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

## சுமந்திரனின் வீட்டில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடக்கிக் கொண்டவர்.

இதனையடுத்து இன்று பகல் சுமந்திரன் எம்.பியுடன் தொடர்பு கொண்ட நாடாளுமன்ற அதிகாரிகள், நாடாளுமன்றத்தை எப்படிக் கூட்டுவது என்பது பற்றிய கட்சித் தலைவர்களின் கூட்டம் நாளை நாடாளுமன்றத்தில் நடைபெறவிருப்பதால் அதில் பங்குபற்றும்படியான அழைப்பை விடுத்தனர்.

எனினும், பொலிஸ் உத்தரவில் தாம் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதால் இக் கூட்டத்தில் தாம் பங்குபற்ற முடியாதிருப்பதாக சுமந்திரன் எம்.பி. பதிலளித்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற படைக்கல சேவிதர் சுமந்திரன் எம்.பியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று அடையாளப்படுத்தப்படாத எந்த எம்.பிக்கும் இப்படித் தனிமைப்படுத்தல் உத்தரவு வீடுகளில் பிறப்பிக்கப்படவில்லை, தான் அது குறித்து யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபருடன் தொடர்பு கொள்வார் என சுமந்திரனுக்கு அவர் தெரியப்படுத்தினார்.

அதன் பின்னர் சற்று நேரம் கழித்து பொலிஸார் வந்து தாம் ஒட்டிய தனிமைப்படுத்தல் ஸ்ரிக்கரை தாங்களே அகற்றினர்.

சுமந்திரன் எம்.பியைத் தனிமைப்படுத்தலில் முடக்குவதில் யாழ் பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் பிரசாத் பெர்னாண்டோ முழு மூச்சாகச் செயற்பட்டார் எனச் செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே.

## கிளிநொச்சியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 132 குடும்பங்களைச் சேர்ந்த 408 பேரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொது மக்களின் தற்காலிக மற்றும் நிரந்த வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளமையால் அவர்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக ஊழியர்கள், இராணுவத்தினர் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் மக்களுக்கு தேவையான உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கன்னியா விபத்தில் ......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## இராணுவ ஆட்சியை நோக்கி?

அரசியல் ரீதியாக நெருக்கடி வரும்போது தமது இராணுவ முகத்தைக் காட்டுவதற்குத் தாம் பின் நிற்கப் போவதில்லை என்ற செய்தியை நாட்டுக்குப் பகிரங்கமாகக் கோடி காட்டியிருக்கின்றார் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ.

அம்பாறையில் சில தினங்களுக்கு முன்னர் அவர் பகிரங்கமாக ஆற்றிய உரை இதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை – நாட்டின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை – இது மிக ஆபத்தான கட்டம்.

கோட்டாபய ராஜபக்ஷ இளம் வயதிலேயே படையில் இணைந்து கொண்ட இராணுவ வீரர். படையில் லேணல் தரம் வரை உயர்ந்தவர். அந்தப் படைத்துறைப் பதவிக்குப் பின்னர் இலங்கையில் அவர் வகித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற பதவி நிலை சிவில் நிர்வாக அதிகாரிக்கு உரியது என்றாலும் – அதனை யுத்த காலத்தில் வகித்தவர் என்ற முறையில் – சீருடை தரிக்காத படை அதிகாரி போலவே அதனையும் முன்னெடுத்தார் என்பது வெளிப்படையானது. எல்லோருக்கும் தெரிந்தது.

பின்னர், இலங்கை அரசியலிலும் கூட பல பருவ நிலைகளைத் தாண்டி வந்த அரசியல்வாதி அல்லர் அவர்.

ஓர் உள்ளூராட்சி மன்றத்திலோ, மாகாண சபையிலோ, நாடாளுமன்றத்திலோ ஒரு நாள் தன்னும் உறுப்புரிமை வகித்தவரும் அல்லர். அத்தகைய தேர்தல் ஒன்றில் போட்டியிட்டவர் கூட அல்லர்.

இராணுவ அதிகாரிக் கதிரையில் இருந்து நேரடியாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு ஒரே பாய்ச்சலில் வந்து சேர்ந்தவர்.

நாட்டின் முப்படைகளினதும், பொலிஸினதும் தலைகர்த்தர் ஜனாதிபதியே என்ற முறையில் அப் பதவியும் இப்போது கோட்டாபய ராஜபக்ஷ வசமே உள்ளது. அந்தப் பதவியையே இராணுவ ரீதியில் இப்போது அலங்கரித்து – பிரயோகித்து – நிற்கின்றார் அவர். சீருடை தரிக்காத இராணுவ அதிகாரியாகவே அதனை அவர் முன்னெடுக்க முயல்கின்றார் என்பது அப்பட்டமான உண்மை.

இதுவே, நாட்டின் எதிர்காலத்துக்கும், இப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் மிகவும் ஆபத்தான விடயம் என்று கணக்கிடுகின்றனர் – அல்லது மதிப்பீடு செய்கின்றனர் – அவதானிகள்.

ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு போன்றவற்றுக்கு முன்னாள் படையினரை செயலாளராக நியமித்திருக்கின்றார்.

ஒரு நாட்டை நிர்வகிப்பதற்கு மிக முக்கியமான உள்நாட்டலுவல்கள் அமைச்சை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்து ரியட் அட்மிரல் சரத் வீரசேகரவை அந்த அமைச்சின் செயலாளராக நியமித்துக் கையாளுகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

போதாக்குறைக்கு மாவட்டம் தோறும் கொரோனாத் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரில் சேவையில் இருக்கும் கேணல், பிரிகேடியர்களை மாவட்டப் பொறுப்பாளர்களாக நியமித்து அவர்களின் கீழ் பணியாற்றும்படி பிரதேச, செயலக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இது ஒரு பிழையான முன்னுதாரணம். சிவில் நிர்வாகியாக இருக்கக்கூடிய அரசியல்வாதியை இராணுவ ரீதியான செயற்போக்குக்கு நெட்டித்தள்ள இடமளிக்கும் சூழல் இதுவாகும்.

நாட்டின் தலைவர் கதிரையில் இருப்பவர். தேவையான நேரத்தில் இராணுவ ரீதியான ஆட்சிக்கும் மாற வாய்ப்பளிக்கும் களநிலைவரங்களை இச்சூழல் தரக் கூடியது என்பது மறுக்கக் கூடிய ஒன்றல்ல.

ஆட்சியில் இருப்பவர்களும், அவர்களைச் சேர்ந்தோரும், நாட்டு மக்களும் அத்தகைய சூழ் நிலையை அடியோடு விரும்பா விட்டாலும் –

ஜனநாயக ஆட்சி முறைமையையே எல்லோரும் வலியுறுத்தி நின்றாலும் –

ஆட்சித் தலைவராக இருப்பவர் விரும்பிய சமயத்தில் தமது ஆட்சி முறைத் தத்துவத்தை இராணுவ ரீதியிலானதா மாற்ற விரும்பின், எந்த நெருக்கடிகள் மற்றும் குழப்பமின்றி மாற்றக் கூடிய வாய்ப்பான சூழல் நாம் விரும்பியோ, விரும்பாமலேயோ முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து உஷாரும், எச்சரிக்கையும் அடையாமல் தென்னிலங்கை அரசியல் முறைமை வாழாவிருப்பது அதை விட ஆபத்தானதாகும்.

நிலைமையின் விபரீதத்தை நமது சமூகமும் தென்னிலங்கையும் புரிந்து கொள்ள முற்படும் போது விடயம் நமது கையை மீறிப்போய் விட்டாலும் போய் விட்டிருக்கும்.

அப்படி ஒரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதாயின் தற்போது நலிவுற்றுப் போயிருக்கும் நாட்டின் சிவில் நிர்வாகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இராணுவத் தலையீட்டைத் தவிர்க்க வேண்டும்.

இராணுவத் தலையீட்டுப் பாணிக்கான அரசியல் முறைமை ஏற்படாமல் தவிர்ப்பதாயின் ஜனநாயகக் கட்டமைப்புகளும் ஜனநாயகப் பதவிகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

செயலிழந்து போயிருக்கும் மாகாண சபை முறைமையை மீளத் தேர்தலை நடத்தி செயற்படுத்துமாறு கோரப்படுவது கூட இந்தப் பின்புலத்தில்தான்...!

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# ஆணைக்குழு அறிக்கைக்கு காத்திருப்பு; சட்ட நடவடிக்கை எடுப்பதில் தாமதம்!



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்காக காத்திருப்பதால் சட்ட நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த விசாரணை அறிக்கை ஜனவரி 31 ஆம் திகதி கிடைக்கப்பெறும் என்று தான் எதிர்பார்க்கிறார் எனவும் மேலும் அதனை ஆராய்ந்து மேலும் சாட்சியங்கள் ஆய்வு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பொறுப்புக் கூறவேண்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபரால் 12 சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் அமெரிக்க பிரஜைகளும் இருக்கின்றமையால், பொருத்தமான தகவல்கள் அமெரிக்க நீதிமன்றங்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

# சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறிய 2 ஆயிரத்து 334 பேர் மேல் மாகாணத்தில் கைது

முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறியமைக்காக மேல் மாகாணத்தில் ஜனவரி 5 ஆம் திகதி முதல் கடந்த திங்கட்கிழமை வரையான காலப் பகுதியில் மொத்தம் 2 ஆயிரத்து 334 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 1,313 நபர்களிடம் விரைவான அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 19 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டது. மேலும் 1,021 பேர் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த இரு பரிசோதனைகளின் மூலமும் இதுவரை மொத்தம் 46 கொரோனா வைரஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்தல் நடமுறைகளைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதற்கிடையில் இந்த குற்றச்சாட்டுக்காக மேல் மாகாணத்துக்கு வெளியே 23 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மேல் மாகாணத்துக்கு வெளியே 2 ஆயிரத்து 438 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் 3 குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டன



மட்டக்களப்பில் உன்னிச்சை, நவகிரி, றூகம் ஆகிய குளங்களின் வான்கதவுகள் நேற்று (திங்கட்கிழமை) திறக்கப்பட்டுள்ளன என மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நடராசா நாகரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து கடும் மழைபெய்து வருவதையடுத்து குளங்களில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

இதனால், உன்னிச்சை குளத்தின் மூன்று வான்கதவுகள் ஐந்து அடி உயரத்துக்கும், நவகிரி குளத்தின் இரண்டு வான் கதவுகள் ஐந்து அடி உயரத்துக்கும், றூகம் குளத்தின் இரண்டு வான்கதவுகள் எட்டு அடி உயரத்துக்கும் திறந்துவிடப்பட்டுள்ளன.

உன்னிச்சைகுளம் 33 அடியும், நவகிரி குளம் 31 அடியும் றுகம்குளம் 15 அடி 18 அங்குலம் நீர் கொள்ளவுள்ள குளங்களாகக் காணப்படுகின்றன.

இருந்தபோதும், குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து வருவதையடுத்து தேவையற்ற நீரை வெளியேற்ற வேண்டியதையடுத்து இந்தக் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என நடராசா நாகரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தக் குளங்களுக்கு அருகிலும், தாழ்நிலப் பகுதிகளிலும் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். இளைஞர்களின் புதிய முயற்சி:

# சூம் செயலியில் அரங்கேறவுள்ளது 'வண்டியும் தொந்தியும்' நாடகம்!

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி காலப்பகுதியில் பலதுறைகளும் பாதிக்கப்பட்டமை போன்று நாடகத் துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்லில் நாடக ஆற்றுகைகளை நிகழ்த்துவதற்கு மெய்நிகர் வெளியைப் பயன்படுத்தும் எண்ணம் உலக அளவில் சில நாடுகளில் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை நாடகங்களை நிகழ்த்த முடியாத நிலை நீடிக்கின்ற சூழலில் தமிழ் நாடகங்களையும் நிகழ்த்த முடியாதுள்ளது.

அந்தவகையில், நாடக உலகில் முதன் முறையாக இணைய வழியாக நாடகத்தை நடத்தும் ஒரு பரீட்சார்த்த முயற்சியை யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தவுள்ளது.

அதன்படி, 'வண்டியும் தொந்தியும்' நாடகம் சூம் செயலிவழியாக அரங்கேற்றப்படவுள்ளது. நகைச்சுவைப் பாங்கான இந்த நாடகம் இன்று (செவ்வாய்கிழமை) இரவு ஏழு மணிக்கு சூம் செயலி ஊடாக (Meeting ID: 857 1051 6422, Meeting Pass Code: 2021) பார்வையிட முடியும்.

செயல்திறன் அரங்க இயக்குநர் தே.தேவானந்தின் இயக்கத்தில், ரி.றொபேர்ட்டின் இசையில், த.பிரதீபன் மற்றும் இ.சாய்ராம் ஆகியோர் இந்த நாடகத்தில் நடித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மலைச்சரிவில் வீழ்ந்த லொறியை ஒன்று திரண்டு மீட்ட கிராம மக்கள்



நாகாலாந்தில் மலைச்சரிவில் விழுந்த லொறியை 100க்கும் மேற்பட்ட கிராம மக்கள் ஒன்றிணைந்து மேலே கொண்டு வந்தனர்.

அங்குள்ள கிராமம் ஒன்றில் மலைப்பாதையில் சென்று கொண்டிருந்த லொறி கட்டுப்பாட்டை இழந்து சரிந்து விழுந்தது. இதனையறிந்த கிராமத்தினர் ஒன்றிணைந்து பெரிய கயிறுகளைக் கட்டி லொறியை மேடான பகுதிக்கு இழுத்தனர்.

ஊர் கூடி தேர் இழுத்தால் என்ற பழமொழிக்கு ஏற்ப அனைவரும் கோரஸாக சப்தமிட்டு லொறியை ஒரு வழியாக மேலேற்றினர்.

# விஷ சாராயம் குடித்து பதினொரு பேர் சாவு!

## மத்திய பிரதேசத்தில் சம்பவம்



மத்திய பிரதேச மாநிலத்தில் விஷ சாராயம் குடித்து 11 பேர் பலியாகியுள்ளனர்.

மோரெனா மாவட்டம் பகவாலி, மான்பூர் கிராமங்களைச் சேர்ந்த பலர் நேற்றிரவு சாராயம் அருந்தியுள்ளனர். இதையடுத்து உடல்நிலை பாதித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பகவாலி கிராமத்தை சேர்ந்த 3 பேரும், மான்பூர் கிராமத்தை சேர்ந்த 8 பேரும் பலியாகியுள்ளனர்.

மேலும் குவாலியரில் உள்ள மருத்துவமனையில் உடல்நிலை பாதித்து 7 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். பரிசோதனையில் அவர்கள் அருந்திய சாராயமே மரணத்துக்கு காரணமென கண்டறியப்பட்டுள்ளது.

இதுபற்றி மாநில மந்திரி நரோட்டம் மிஷ்ரா செய்தியாளர்களிடம் பேசும்பொழுது, 'நான் மிகுந்த வருத்தமடைந்தேன். காவல் நிலைய அதிகாரி உடனடியாக இடைநிறுத்தம் செய்யப்பட்டு உள்ளார். சம்பவம் நடந்த பகுதிக்கு மூத்த அதிகாரிகள் சென்றுள்ளனர். இந்த விவகாரம் பற்றி குழுவொன்று விசாரணை மேற்கொள்ளும். குற்றவாளிகள் நீதியில் இருந்து தப்ப முடியாது' – என கூறியுள்ளார்.

# திருச்சி லால்குடித் தமிழருக்கு பெண்டகனில் முக்கிய பதவி!

## விண்ணப்பிக்காமலேயே தேடி வந்தது

அமெரிக்க இராணுவத் தலைமையிடமான பெண்டகனில் தலைமைத் தகவல் தொடர்பு அதிகாரியாக லால்குடியை சேர்ந்த ராஜ் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே மணக்கால் ஊராட்சியில் உள்ள கீழ் அக்ரஹாரம் கிராமத்தைச் சேர்ந்த கணேசன் – சாவித்ரி தம்பதியின் மகன் ராஜ். திருச்சி துவாக்குடியில் உள்ள என்.ஐ.டி. யில் பிடெக் எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் படித்தார். பின்னர், அமெரிக்கா சென்று எம்.எஸ். மற்றும் பி.எச்.டி. படித்துள்ளார். அமெரிக்காவில் பல்வேறு ஐ.டி. நிறுவனங்களில் பணியாற்றிய நிலையில் ராஜ்வின் திறமையை அறிந்த அமெரிக்கா இராணுவம், பெண்டகனின் தலைமைத் தகவல் தொடர்பு அதிகாரியாக ராஜ்வை நியமித்துள்ளது.

இந்த பதவி இராணுவத்தில் 3 நட்சத்திர அந்தஸ்து பெற்ற ஜெனரல் பதவிக்கு நிகரானது . பென்டகனின் இந்த பதவிக்கு ராஜ் விண்ணப்பிக்கவே இல்லை.ஆனாலும் ராஜ்வின் திறமைக்காக அமெரிக்க இராணுவம் அவருக்கு இத்தகைய கௌரவத்தை அளித்துள்ளது.

ராஜ்வுக்கு பிருந்தா என்ற மனைவியும் அஸ்வின், அபிஷேக் என்ற இருமகன்களும் உள்ளனர். பிருந்தா அமெரிக்கா அரசின் சுகாதாரத்துறையில் ஐ. டி.புரோகிரமராக பணி செய்கிறார். அமெரிக்காவில் வாழ்ந்தாலும் இரு மகன்களையும் கர்நாடக சங்கீதம் கற்க வைத்துள்ளார் ராஜ். அமெரிக்காவில் ராஜ்வின் மகன்கள் கர்நாடக கச்சேரி நிகழ்ச்சி நடத்துவதும் உண்டு.

இது குறித்து மணக்கால் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவருமான விஜயகுமார் கூறியதாவது,"எங்கள் கிராமத்தில் பிறந்த அவர் அமெரிக்க நாட்டின் இராணுவத்தில் உயரதிகாரியாக பணியாற்றி வருகிறார் என்ற செய்தி எங்களுக்கு மட்டுமல்லாது இந்த கிராம மக்களும் மணக்கால் ஊராட்சி மக்களையும் பெருமைப்பட வைத்துள்ளது " என்றார்.

# பெங்களூரு போதைப் பொருள் கடத்தல் வழக்கு முக்கிய சந்தேகநபர் ஆல்வா சென்னையில் கைது

பெங்களூரு போதைப் பொருள் கடத்தல் வழக்கில் தலைமறைவாக இருந்த, மறைந்த கர்நாடகா முன்னாள் அமைச்சர் ஜீவராஜ் ஆல்வாவின் மகனும், நடிகர் விவேக் ஓபராயின் மைத்துனருமான ஆதித்தியா ஆல்வா சென்னையில் கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருள் கடத்தல் வழக்கில் பெங்களூரைச் சேர்ந்த நடிகர், நடிகைகள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த முக்கிய குற்றவாளி ஆதித்ய ஆல்வாவை மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில், சென்னையில் பதுங்கி இருந்த அவர் கைது செய்யப்பட்டு, பெங்களூரு மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் அலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்

# பத்தாயிரம் இராணுவ வீரர்களை சீனா லடாக் பள்ளத்தாக்கில் இருந்து வாபஸ்



கிழக்கு லடாக்கில், எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அருகே உள்ள பள்ளத்தாக்குப் பகுதியில் நிறுத்தப்பட்டு இருந்த சீன ராணுவ வீரர்கள் 10 ஆயிரம் பேரை சீனா திரும்ப பெற்றுக் கொண்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

லடாக் எல்லையை ஒட்டி பள்ளத்தாக்கு பகுதியில் இருந்த பத்தாயிரம் பேரும் வாபஸ் பெறப்பட்ட நிலையில், முன்களப் பகுதியில் சீன இராணுவ வீரர்கள் எப்போதும் போல் பணியில் ஈடுபட்டுள்ளனர். அங்கு இருதரப்பு வீரர்களும் பல்வேறு இடங்களில் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் ஏற்பட்ட மோதலுக்குப் பின் இந்திய - சீன இராணுவங்கள இடையே படை வீரர்களை விலக்கி கொள்வதற்கு பலகட்டமாக பேச்சு நடத் தப்பட்டு வரும் நிலையில், சீனாவின் இந்த நடவடிக்கை குறிப்பிடத்தக்க முன் னேற்றமாக பார்க்கப்படுகிறது.


# கல்யாணமாலை



வட சர்வதேச
திருமண சேவை



**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1982.06.16
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரேவதி
செவ் - 7 இல்
பாவம் - 25 1/2
கல்வி - A/L
தொழில் - T.V கடை
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1991.03.27
மதம் - இந்து V
நட்சத்திரம் - மகம்
செவ் - 1 இல்
பாவம் - 29 3/4
கல்வி - BA, MA பட்டதாரி
தொழில் - அரச உத்தியோகம்
எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.


க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528


# இந்தியாவிடம் இருந்து மூன்று பகுதிகள் மீட்கப்படும் என்கின்றார் நேபாள பிரதமர்

## மீண்டும் சர்ச்சைக் கருத்து



காத்மாண்டு,ஜன.12

இந்தியாவிடம் இருந்து 3 பகுதிகள் மீட்கப்படும் என்று நேபாள பிரதமர் கே.பி.சர்மாஒலி, மீண்டும் சர்ச்சை கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள காலாபானி, லிபுலேக், லிம்பியதுரா ஆகிய 3 பகுதிகளைச் தங்களுக்கு சொந்தமானது என்று நேபாளம் உரிமை கோரி வருகிறது.

இந்த மூன்று பகுதிகளையும் தங்கள் நாட்டுடன் இணைத்து புதிய வரை படத்தை நேபாள பிரதமர் கே.பி.சர்மாஒலி வெளியிட்டார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. ஆனாலும் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை கே.பி.சர்மா ஒலி கூறி வந்தார்.

இதற்கிடையே நேபாளத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்துக்கு நாடாளுமன்றம் முன் கூட்டியே கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலி, இந்தியாவிடம் இருந்து 3 பகுதிகள் மீட்கப்படும் என்று மீண்டும் சர்ச்சை கருத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது –

மகாகாளி நதிக்கு கிழக்கே உள்ள காலாபானி, லிபுலேக், லிம்பியதுரா ஆகிய பகுதிகள் சுகவுலி ஒப்பந்தத்தின்படி நேபாளத்துக்கு சொந்தமானது. இந்தியாவுடன் தூதரக ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி அந்த பகுதிகள் மீட்கப்படும்.

நேபாள வெளியுறவுத்துறை அமைச்சர் நாளை மறுதினம் 14 ஆம் திகதி இந்தியா செல்கிறார். அப்போது அவர் 3 பகுதிகளையும் இணைத்து நேபாளம் வெளியிட்ட வரைபடம் குறித்து ஆலோசனை நடத்துவார்.

இறையாண்மை சமத்துவத்தின் அடிப்படையில் இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்த நேபாளம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதே போல் சில விவகாரங்களில் நியாயமான கவலைகளை இந்தியாவிடம் எழுப்ப நேபாளம் தயங்கக் கூடாது. – இவ்வாறு அவர் கூறினார்.

# பைஸர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்திக் கொண்டார் ஜோ பைடன்



உலகளவில் கொரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளிலும், அதிக உயிரிழப்புக் கொண்ட நாடுகளிலும் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

கொரோனாவை கட்டுப்படுத்த பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும் பரவல் அதிகமானது. இதற்கிடையே கொரோனா தடுப்புக்கான பைஸர் மருந்து கண்டறியப்பட்டது அந்நாட்டு மக்களுக்கு ஆறுதலை ஏற்படுத்தியது.

அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பைடன் அமெரிக்காவின் அடுத்த அதிபராக வரும் வாரத்தில் பதவியேற்க உள்ளார்.

இதற்கிடையே, மருத்துவமனை ஒன்றில் ஜோ பைடனுக்கு நேரலையில் கொரோனா தடுப்புக்கான பைஸர் மருந்தின் முதல் டோஸ் கடந்த சில வாரங்களுக்கு முன்பு செலுத்தப்பட்டது. இந்நிலையில், பைஸர் தடுப்பூசியின் 2 ஆவது டோசையும் ஜோ பைடன் இன்று செலுத்திக்கொண்டுள்ளார்.

அதன்பின் செய்தியாளர்களை சந்தித்த ஜோ பைடன், மக்களுக்கு கொரோனா தடுப்பூசி கிடைக்கச் செய்வதே தனது முன்னுரிமையான பணி என தெரிவித்தார்.

## புதுவித கொரோனா ஜப்பானில் கண்டுபிடிப்பு

இங்கிலாந்தில் உருவான உருமாறிய கொரோனாவில் இருந்து மாறுபட்ட புதிய வகை கொரோனா, ஜப்பானில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரேசிலிருந்து டோக்கியோ விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்த நால்வரிடமே இந்த புதிய கொரோனா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 45 வயதான ஆண், 35 வயதான பெண், 19 வயதுக்குட்பட்ட ஒரு ஆண், பெண் ஆகியோருக்கு இந்த கொரோனா கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களில் இருவருக்கு எந்த அறிகுறியும் இல்லை. இருப்பினும், நால்வரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த உருமாறிய கொரோனா குறித்து உலக சுகாதார நிறுவனத்துடனும், பிற நாடுகளுடனும் ஜப்பான் ஆலோசனை நடத்தி வருகிறது.

அதேநேரம் தற்போதைய தடுப்பூசிகள், இந்த கொரோனாவுக்கு எதிராக செயல்படுமா என்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.


## சீனாவில் தங்கச் சுரங்கத்தில் வெடி விபத்து 22 பணியாளர்கள் பூமிக்கடியில் சிக்கித் தவிப்பு



சீனாவில் தங்கச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தால் தரைதளத்தில் சிக்கிக் கொண்டுள்ள 22 சுரங்கப்பணியாளர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கிழக்கு சீனாவின் Shandong மாகாணத்தில், Qixia பகுதியில் அமைந்துள்ள தங்க சுரங்கத்திலேயே கடந்த ஞாயிறன்று இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. அவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் 300க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

## உறைந்த பனி ஏரியில் நீந்தி ரஷ்ய பெண் கின்னஸ் சாதனை



ரஷ்யாவைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனை ஒருவர் பனிக்கட்டியால் உறைந்த ஏரி ஒன்றில் 280அடி ஆழத்தில் நீந்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

மாஸ்கோவைச் சேர்ந்த Yekaterina Nekrasova என்ற 40வயதான பெண்மணியே இந்த சாதனையை படைத்துள்ளார். சைபீரியாவில் உள்ள உறைந்த ஏரியான Baikal ஏரியில் அந்த பெண் 280 அடி ஆழத்தில் சுமார் ஒன்றரை நிமிடங்கள் நீந்தினார்.

இதற்கு முன்பு 2020ஆம் ஆண்டில் தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த Amber Fillary என்பவர் நோர்வேயில் உறைந்த ஏரியில் 230அடி ஆழத்தில் நீந்தியதே கின்னஸ் சாதனையாக இருந்து வந்தது.

## அமெரிக்காவில் உயிரியல் பூங்காவிலுள்ள 2 கொரில்லா குரங்குகளுக்கு கொரோனா

அமெரிக்காவில் கொரோனா வைரஸால் தினமும் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்தநிலையில் 2 கொரில்லா குரங்குகளுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சான்டிகோவில் உள்ள விலங்குகளுக்கான பூங்காவில் பொது மக்கள் செல்ல கடந்த டிசெம்பர் 6 ஆம் திகதி தடை விதிக்கப்பட்டது. நிலையில் பூங்காவில் உள்ள 2 கொரில்லா குரங்குகளுக்கு கடந்த வாரம் இருமல் ஏற்பட்டது. இதையடுத்து கொரில்லா குரங்குகளுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து குரங்குகள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. அறிகுறி இல்லாத பூங்கா ஊழியர்களிடம் இருந்து கொரில்லா குரங்குகளுக்கு கொரோனா பரவி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. கொரில்லா குரங்குகளுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளமை இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.



## இரண்டாவது முறையாக முடங்கியது மலேசியா



மலேசியாவில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைக்கு ஏதுவாக அந்நாட்டின் மாமன்னர் அவசரநிலையை பிரகடனம் செய்துள்ளார். இதற்கான அறிவிப்பு இன்று காலை வெளியிடப்பட்டது. ஆகஸ்ட் 1ஆம் திகதி வரை நாட்டில் அவசரநிலை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை மலேசியாவில் இரண்டாவது முறையாக லொக் டவுன் அறிவிக்கப்பட்ட நிலையில் இன்று காலை அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த நடவடிக்கையானது இராணுவப் புரட்சி அல்ல என்றும், நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்படாது என்றும் மலேசியப் பிரதமர் மொகிதீன் யாசின் தெரிவித்துள்ளார்.

கூட்டரசு மற்றும் மாநில அரசுகள் நீடிக்கும் என்று குறிப்பிட்ட அவர், பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படாது என்ற உறுதிமொழியையும் அளித்துள்ளார். இன்று காலை தொலைக்காட்சி வழியாக நாட்டு மக்கள் மத்தியில் உரையாற்றியபோது அவர் இதை தெரிவித்தார்.

வைரஸ் தொற்றுப் பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்படும் பட்சத்தில் ஆகஸ்ட் 1ஆம் திகதிக்கு முன்பாகவே அவசரநிலை உத்தரவு மீட்டுக்கொள்ளப்பட வாய்ப்புள்ளது எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

மலேசியாவின் பல்வேறு பகுதிகளில் மழை, வெள்ளத்தால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மாமன்னர் கவலை அடைந்துள்ளார் எனவும் தொற்றுப் பரவலை உடனடியாக கட்டுப்படுத்தாவிட்டால் மக்கள் மேலும் மோசமாக பாதிக்கப்படுவார்கள் என்பதை அவர் உணர்ந்துள்ளதாகவும் அரண்மனை அறிக்கை தெரிவிக்கிறது.

இதுவரை 1 லட்சத்து 38 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 555 பேர் நோய்த் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.






# அடையாளம் அற்ற மனிதர்களாக அச்சம் மிகுந்த சூழலில் தமிழர்கள்!

## சிறீதரன் எம்.பி. வேதனை



அடையாளம் அற்ற மனிதர்களாக தமிழர்களாகிய நாம் மாறப்போகிறோமா என்ற அச்சம் மிகுந்த சூழ்நிலையில் தமிழர்கள் வாழ்கின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் -

மிகமுக்கியமாக இன்றைய காலகட்டம் என்பது எல்லோருக்குமே ஓர் அச்சம் மிகுந்த சூழ்நிலையைத்தந்திருக்கிறது. இன்று என்ன நடக்கிறது, நாளை அல்லது நாளை மறுதினம் என்ன நடக்கும் என்ற கேள்விகளோடு நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அடையாளத்தைத்தொலைத்த மனிதர்களாக - அடையாளம் அற்ற மனிதர்களாக - நாம் வாழ வேண்டிய காலம் வருமோ அல்லது யார் யாரெல்லாம் எப்படி எம்மை ஆளப்போகிறார்கள் என்கிற அச்சம் மிகுந்த சூழ்நிலையில் தான் நாம் இருக்கிறோம்.

இவ்வேளையில், நான் இளைஞர்களைக் கோருகின்றமை இந்த மண்ணில் நாம் தமிழ்த் தேசிய இனமாக - எங்கள் அடையாளத்தைத் தொலைத்து விடாமல் நிமிர்ந்து வாழ்கின்ற இனமாக - உணர்வுகள் சூழ்ந்த இனமாக - வாழவேண்டும்.

நேற்றுக்கூட, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவன் ஒருவர் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார். அந்த மாணவனிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு 'உணர்வு என்பது உள்ளத்தில் மட்டும் இருந்து வந்தால் போதுமானது. தாய், தந்தையிரிடம் கேட்கவேண்டும் என்று நான் யோசிக்கவில்லை. இங்கே எனது இனம் அழிக்கப்படுகிறது. என் இனத்தின் அடையாளங்கள் தொலைக்கப்படுகின்றன. அதனால் இந்தப்போராட்டத்தில் குதித்து இருக்கின்றேன்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் செய்தியெல்லாம் நாங்கள் இன்னும் இன்னும் எத்தனையோ இடர்களை சந்திக்கப் போகின்றோம், சிங்கள, பௌத்த அரசுகளால் சூழப்பட்டுள்ள இந்த நிலை மிகப்பெரிய கேள்விகளை எங்கள் முன்னால் வைத்திருக்கிறது. இவற்றுக்கெல்லாம் அஞ்சாது, சோரம் போகாதவர்களாக நாம் வாழவேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலை தனியொரு சமூகத்தினது சொத்து அல்ல பயங்கரவாதிகளை நினைவுகூர அனுமதிக்கக்கூடாது!

## சரத் வீரசேகர குமுறுகிறார்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனியொரு சமூகத்தின் சொத்து அல்ல என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூரும் போர்வையில் தடைசெய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்த பயங்கரவாதிகளை நினைவுகூர்வதற்கு அனுமதியளிக்கக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் -

'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது தனியொரு சமூகத்தின் பிரத்தியேகக் களமோ அல்லது சொத்தோ அல்ல. இது ஒருமித்த இலங்கையின் அனைத்து சட்டங்களுக்கும் உட்பட்டதாகும்' என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூருவது என்ற போர்வையில் தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கத்தை நினைவுகூருவதற்கும் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கும் எந்தவொரு தரப்பினருக்கும் அனுமதியளிக்கக் கூடாது என சரத் வீரசேகர வலியுறுத்தியுள்ளார்.

# கிழக்கில் 32 பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை பூட்டு!

கிழக்கு மாகாணத்தில் உள்ள 32 பாடசாலைகள் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

காத்தான்குடி பகுதியில் 25 பாடசாலைகளும், கல்முனையில் 5 பாடசாலைகளும், திருக்கோவில் பகுதியில் ஒரு பாடசாலையும், அம்பாறை பகுதியில் ஒரு பாடசாலையும் மூடப்படுகின்றது.

ஆளுநர், மாகாண கல்வி பணிப்பாளர்கள் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# ஹரின் பெர்னாண்டோவின் பாதுகாப்பைப் பலப்படுத்துக

## அமைச்சர் நாமல் வலியுறுத்து



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அவருக்கு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

- இவ்வாறு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனக்குக் கடுமையான உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதால், தனக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாமதமின்றி மேற்கொள்ளுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின், நேற்று முன்தினம் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் நாமல் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியினுள் ஹரின் பெர்னாண்டோவுக்குப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவருக்கு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக விடயங்களில் ஹரின் பெர்னாண்டோவுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால், அதற்கும் ஜனாதிபதி பொறுப்புக் கூற வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, கட்சியின் உள்ளகப் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு, ஹரின் பெர்னாண்டோவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும். - என்றார்.

# மட்டக்களப்பில் இதுவரையில் 387 கொரோனா நோயாளர்கள்

## மட்டு. பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) 12 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 11 பேர் சுகாதார துறையைச் சேர்ந்தவர்கள் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 387 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

மேலும் அவர்களில் 132 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் 255 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778




# மீண்டும் நிரூபிக்கப்பட்டது மாணவ சமூகத்தின் பலம்!

## சாணக்கியன் எம்.பி. பெருமிதம்



மாணவ சமுதாயத்தின் பலம் இன்னொருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் இடித்து அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வடக்கு, கிழக்கில் நேற்று (திங்கட்கிழமை) பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அனைத்து தமிழ் கட்சிகள், மாணவர் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புகளால் கதவடைப்புப் போராட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும், இந்தக் கதவடைப்புப் போராட்டத்துக்கு வடக்கு கிழக்கு மக்களும் தமது பூரண ஆதரவை வழங்கியிருந்தனர்.

இந்நிலையில், பூரண ஹர்த்தால் வெற்றியடைந்துள்ளமை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இரா.சாணக்கியன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

குறுகிய கால அவகாசத்தில் விடுக்கப்பட்ட பூரண ஹர்த்தாலுக்கு மாபெரும் ஆதரவு வழங்கியமைக்கு வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மக்களுக்கும் மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இன்றைய தினம் (நேற்று) மாணவ சமுதாயத்தின் பலம் இன்னொரு முறை நிரூபிக்கப்படுள்ளது. இது பலருக்கும் பாடம் புகட்டியுள்ளது. எமது ஒற்றுமையே எமது பலம். ‘எமது உரிமை எமது உணர்வு.’

நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுப் பரம்பல் அச்சம் காரணமாக நான் சுய தனிமைப்படுதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளேன். இதன் காரணமாக அன்றைய தினம் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு என்னால் வர முடியாதமையை எண்ணி மிகவும் மனம் வருந்துகின்றேன்.

அத்துடன், தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மயிலத்தமடு பண்ணையாளர்களை நேரில் சென்று பார்க்க முடியால் போய்விட்டமையையும் எண்ணி வருந்துகிறேன்.

உங்கள் பிரச்சினையை நான் ஒரு போதும் கைவிடப்போபவனல்லன். நீதி கிடைக்கும் வரை தொடர்வேன். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.01.2021இல் வெளியிடப்பெற்றது.